| English | Tamil |
| --- | --- |
| The ACT will increase elective surgery across the Territory in a careful and staged approach. This approach is in line with the Federal Government’s announcement on 15 May 2020 that national restrictions on elective surgery have been lifted. | *ACT-* இல் *Elective surgery*-தேர்ந்தெடுக்கப்பட்ட அறுவை சிகிச்சைகள் *Territory* முழுவதும் அவதானமாகவும் படிப்படியான அணுகுமுறையுடனும் அதிகரிக்கப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட அறுவை சிகிச்சைக்கான தேசிய கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதாக *2020* மே *15* அன்று மத்திய அரசு அறிவித்ததற்கு இணங்க இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. |
| Patients whose elective surgery has been confirmed and booked will be contacted directly by the relevant hospital.<br>If your condition changes, make an appointment to see your GP or your surgeon. | தேர்ந்தெடுக்கப்பட்ட அறுவை சிகிச்சை உறுதி செய்யப்பட்டு முன்பதிவு செய்யப்பட்ட நோயாளிகள், சம்பந்தப்பட்ட மருத்துவமனையால் நேரடியாக தொடர்பு கொள்ளப்படுவார்கள்.<br>உங்கள் நிலைமையில் மாற்றம் ஏற்பட்டால், உங்கள் குடும்ப மருத்துவரையோ அல்லது அறுவை சிகிச்சை நிபுணரையோ சென்று பார்ப்பதற்கு முன்அனுமதி பெறுங்கள். |
| If you have any concerns or questions you can contact our Territory Wide Surgical Services Team on 5124 9889. | உங்களுக்கு ஏதேனும் கவலைகள் அல்லது கேள்விகள் இருந்தால், எமது *Territory Wide Surgical Services Team*-ஐ *5124 9889* என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம். |